முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1310

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.05.2023,திங்கட்கிழமை

1. தர்மஞானியே அரங்கா வாழ்க
   தவசியாக வாழும் ஞானியே வாழ்க
   பெருமைகொண்ட ஞான உலகம் படைக்க
   பிரபஞ்சத்தில் மக்களையெல்லாம் ஞானிகளாகத் தேற்ற
2. தேற்றவே அவதாரம் புரிந்த அண்ணலே
   தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   ஆற்றல்பட ஞான அறிவுரை ஆசி
   அருளுவேன் அரங்கனுக்கு சோபகிருது தகர்திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 18ம் நாள், 01.05.2023, திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கன் சக்திகொண்டு
   தரணியையே மாற்றும் மகா சித்து தன்னை
   சண்முகனார் யான் இந்த கலியுகத்தில் நடத்திவர
   சற்குரு அரங்கன் திருவடி பற்றி
4. பற்றி உலகோர் ஞானம் பயில
   பற்றி உலகோர் தர்மம் செய்ய
   உற்றதொரு அவரவர் வினைகள் விலகி
   உயர் ஞானமாம் ஆறுமுகனார் என் ஞானம்
5. ஞானமதும் தெளிவுபட அவரவர்க்கும்
   ஞானியாகும் வண்ணம் ஆற்றலாக மாறி
   வானவர்கள் போற்ற வையகத்தில்
   மக்களெல்லாம் ஞானிகளாகத் தேறி
6. தேறியே உலகை மாற்றும் சித்துதன்னை
   தேசிகன் மூலம் உலகோர் அடைந்து
   ஆறுமுகன் என் தயவுபட இந்த உலகம்
   ஆற்றல்மிக்க ஞான லோகமாக மாற்றம் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–